


## விளைச்சல் குறைந்த 'பரதேசி' பருத்தி... தாங்கிப் பிடிக்கும் 'சுதேசி' பா.ஜ.க?

அனைவருக்கும் பசுமை வணக்கம்!

'வெளிநாட்டுப் பருத்தியை நாம் ஏன் இறக்குமதி செய்ய வேண்டும்? வளர்ந்த நாடுகளுக்கு நிகராக நம் நாட்டின் பருத்தி உற்பத்தியை நாம் பெருக்க வேண்டும்' என்று 'அற்புதமாக'ப் பேசியிருக்கிறார், மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான்.

ஜூலை 11-ம் தேதியன்று, கோவையில் இயங்கும் மத்திய அரசின் பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தில், 'பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவது குறித்த பங்குதாரர்களுடனான கலந்தாய்வு' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கேதான் இப்படி பேசினார் அமைச்சர்.

ஆனால், 'இந்த நிகழ்ச்சியே பன்னாட்டு பி.டி விதை நிறுவனங்களுக்கு ஆதரவாகத்தான் நடத்தப்பட்டது. தற்போது, பி.டி ரக பருத்தியில் விளைச்சல் குறைந்துவிட்டது. பி.டி விதைகளைத் தயாரிக்கும் பேயர் நிறுவனம், புதிதாக ஒரு விதையைக் கொண்டுவரப் பார்க்கிறது. இந்தக் கூட்டமே அதற்கான முன்னோட்டம்தான்' என்று கொந்தளிக்கின்றனர் இயற்கை விவசாயிகள், சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும்.

உண்மையில், 2002-ம் ஆண்டு மத்தியில் ஆளும் இதே பி.ஜே.பி அரசுதான் வெளிநாட்டு ரகமான பி.டி பருத்தியை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. 'பருத்தியைத் தாக்கும் காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்தத்தான் இந்த பி.டி விதைகள்' என்று கூவிக்கூவி விற்றார்கள். ஆனால், 'இது காய்ப்புழுக்களுக்கு எதிராகச் செயல்படாது. பன்னாட்டு நிறுவனங்களின் பருத்தி விதைகளை விவசாயிகளின் தலையில் கட்டாதீர்கள்' என்று கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள், போராடினார்கள், விவசாயிகளும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும். அதையெல்லாம் மீறித்தான் பி.டி ரக பருத்தி இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் இப்போது 90 சதவிகிதம் பி.டி பருத்திதான் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், விளைச்சல் சமீப ஆண்டுகளாக குறைந்துகொண்டே வருகிறது. காய்ப்புழுக்களின் தாக்குதலையும் கட்டுப்படுத்த முடியவில்லை. 2024-25-ம் ஆண்டில் எதிர்பார்த்ததைவிட, 5.62 சதவிகிதம் உற்பத்திக் குறைந்துள்ளது என்பதை மத்திய அரசின் புள்ளிவிவரமே தெரிவிக்கிறது.

இந்நிலையில்தான், டெல்லியிலிருந்து ஓடோடி வந்து, 'உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவோம்' என்றெல்லாம் பேசியிருக்கிறார் அமைச்சர்.

உண்மையில், பருத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், விவசாயிகள் சொல்வதைக் கேட்டாலே போதும். ஆம், 'நம் நாட்டுப் பருத்தி ரகங்கள் நிறையவே இருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்ட எம்.சி.யு.5 ரக பருத்தி அதிகபட்சமாக 25 குவிண்டால் வரை மகசூல் கொடுக்கக்கூடிய ரகம். ஆனால், அந்த ரகம் இப்போது இருக்கும் இடமே தெரியவில்லை. அதையெல்லாம் மறைத்துவிட்டு, அதிகபட்சமாக 12 குவிண்டால் மகசூல் கொடுக்கக்கூடிய அமெரிக்க பி.டி விதைகளுக்கு ஏன் அரசாங்கம் வெண்சாமரம் வீச வேண்டும்?' என்பதுதான் விவசாயிகளின் கேள்வி.

'சுதேசி... சுதேசி' என்று எப்போது பார்த்தாலும் கூப்பாடு போடும் பா.ஜ.க அரசு, 'பரதேசி'களின் தயாரிப்பான பி.டி விதைகளைக் கைவிட்டு, நம் நாட்டு ரக பருத்திகளை மீண்டும் களத்துக்குக் கொண்டு வரலாமே?!

- ஆசிரியர்

Printed by S.Rangaraj and Published by S.Arivazhagan on behalf of Ananda Vikatan Publishers Private Limited and Printed at Ananda Vikatan Publishers Private Limited No.4452 Kalligudi, Manikandam, Madurai - Trichy NH, Trichy - 620 012 and Published from No: 757, Anna Salai, Chennai-600 002. Editor: S.Arivazhagan




# வேர்க் கடலை பயிரில் அதிக மகசூல்...

### வேர்க் கடலை விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்!

**புதுமண்ணை கிராமம், திருவண்ணாமலை (வட்டம்), திருவண்ணாமலை மாவட்டம்**

அமுல் கரிம உரங்கள் வேர்க் கடலை விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றன, சாகுபடிக்கு நிலையான அணுகுமுறையை வழங்குகின்றன. அவை மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன, பல்லுயிரியலை ஊக்குவிக்கின்றன மற்றும் மகசூல் தரத்தை மேம்படுத்துகின்றன. வேர்க் கடலை விவசாயத்தில் கரிம உரமிடுதல் குறித்த ஓர் ஆய்வு, உரம், மண்புழு உரம், கால்நடை உரம், பசுந்தாள் உரம், பயிர் எச்சங்கள் மற்றும் உயிர் உரங்களின் நன்மைகளை எடுத்துக்காட்டுகிறது. இந்த இயற்கை உரங்கள் ஊட்டச்சத்துக்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகின்றன, நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையைத் தூண்டுகின்றன, மேலும் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரிக்கின்றன.

வேர்க் கடலை பயிரை பொறுத்தவரை, அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களில் விரைவான வளர்ச்சிக்கு நைட்ரஜன், வேர் வளர்ச்சிக்கு பாஸ்பரஸ் வேர்க் கடலையில் பருப்பு மற்றும் தரத்திற்கு பொட்டாசியம் ஆகியவை முக்கிய பங்குவகிக்கிறது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை (வட்டம்), புதுமண்ணை கிராமத்தில் 5 ஏக்கர் G 7 ரகம் வேர்க் கடலை பயிருக்கு அமுல் இயற்கை உரங்களை அமுல் கோல்ட், அமுல் பவர் பிளஸ், அமுல் ரூட்கேர், அமுல் N P K கன்சார்டியம், அமுல் ரிச் பிளஸ், அமுல் பாஸ்போ ரிச் மற்றும் கடலை அமிர்த கரைசல் கலவையை வேர்க் கடலை பயிருக்கு அடி உரமாக பயன்படுத்தினோம்.

மேல் உரமாக வேர்க் கடலை விதைத்த 30 நாளில் ரிச் பிளஸ் 2 லிட்டர் தெளிப்பான் மூலம் பயிருக்கு தெளித்தோம்.

மேல் உரமாக வேர்க் கடலை விதைத்த 60 நாளில் பாஸ்போரிச் 1 லிட்டர் தெளிப்பான் மூலம் பயிருக்கு தெளித்தோம்.

இதனால் மகசூல் 20 விழுக்காடு அதிகமாக கிடைத்தது.



மேலும் விவரங்களுக்கு 93639 41424 / info@richplusindia.com

AOF/25

